**துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2018**

---

துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 3716–எஸ்ஆர்ஜ இலக்க 2019 சனவரி 17 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பொருளாதார செயற்பாடுகளின் மீது நேர்மறை தாக்கமொன்றினை ஏற்படுத்தல் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பினூடாக கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா பன்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு பயணஞ் செய்யும் நேரத்தினை குறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து கொழும்பின் ஏனைய பிராந்தியங்களுக்கு சரக்கு போக்குவரத்தின் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 56,850 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 360.2 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 47,349 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 300 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 9,501 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2016 பெப்ரவரி இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியலப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் ஊழியர்களிற்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் செய்யப்பட்ட ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் மொத்தமாக ரூபா 8.19 மில்லியன் இச் செயற்திட்டத்தின் மீது சாட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் ஊழிய கிரயத்தினை மிகைப்படுத்தியது. | புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலையின் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளின் கொடுப்பனவுகளானவை உரிய செயற்திட்டத்தினால் தனியான வங்கிக்கணக்கு திறக்கும் வரை துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தினால் தொடரப்பட்டது. | செயற்திட்டத்தின் மேந்தலை கிரயமானது அச் செயற்திட்டங்களின் கிரயங்களை வேறுவேறாக பிரதிபலிக்க செயற்திட்டங்களுக்கிடையே தனிப்படுத்தப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

## 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

ஆலோசனை சேவைகளின் கண்காணிப்பு, கட்டிடங்கள் மற்றும் கட்டிடங்களின் நிர்மான கண்காணிப்பு என்பவற்றின் வடிவமைப்பு வேலைகள் மற்றும் துறைமுகத்தில் பயிற்சிப்பட்டறைகள் என்பன உள்ளடங்களாக துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் நிர்மான வேலைகள் மீதான நடவடிக்கைகள் செயற்திட்டத்தினால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.2 பயன்படுத்தாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் பெறுகைத்திட்டத்தின் பிரகாரம், துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் நிர்மான வேலைகள் ரூபா 44,945 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மீளாய்வாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், அந்நடவடிக்கைகள் துறைமுகத்தில் கட்டிடங்களினை இடம் பெயர்த்துவதன் நிர்மான வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட பைலிங் வேலைகள் தவிர 2019 ஜூன் 30 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் மூலதன செலவுகளை எதிர்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ரூபா 3,040 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் மொத்தமாக ரூபா | நெடுஞ்சாலையின் நிர்மானங்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம். | அதிகரித்த துவாரத்துளை புலனாய்வு மற்றும் ஆலோசகரின் விபரமான வடிவமைப்பின் தாமதம் காரணமாக, எங்களிற்கு திட்டமிட்டபடி விலை மனுவை அமைக்க முடியாமல் இருந்தது. | ஒட்டுமொத்த திட்டத்தினை கருத்தில் கொள்ளல், அடையக்கூடிய இலக்குகள் என்பன தொகுக்க தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கீடுகள் அதன்படி கோரப்படல் வேண்டும். |

2,925 மில்லியன் ஏனைய செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், மொத்தமாக ரூபா 84.55 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் பொது திறைசேரிக்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

### 3.3 மனிதவள பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட செயற்திட்டத்தின் 21 மூத்த பதவியனிகளில், 02 தலைமை பொறியியலாளர்கள், ஒரு பிரதி செயற்திட்ட பணிப்பாளர், ஒரு செயற்திட்ட பொறியியலாளர் மற்றும் கணக்காளர் உள்ளடங்களாக 15 பதவிகளுக்கான பொருத்தமான உத்தியோகத்தர்கள் 2018 திசைம்பர் 31 இல் உள்ளவாறு கூட வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு தரவுத்தள வலைப்பின்னல் நிர்வாகி முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமல் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 889,992 தொகையான ஊதியமும் செலுத்தப்பட்டிருந்தது. | வடிவமைப்பு மற்றும் நெடுஞ்சாலையின் நிர்மானிப்பு என்பவற்றை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுத்துவதற்கான சாத்தியம். | உடன்பாடு. | வீதி நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதற்கு செயற்திட்டத்திற்காக தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |